# உங்கள் பதிவேடுகளும் நீங்களும்

## உங்களைப் பராமரித்தல்

நாங்கள் முடிந்தளவில் சிறந்த பராமரிப்பை உங்களுக்கு வழங்குகின்றோம் எனப் பார்த்துக்கொள்வதற்கு, உங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பராமரிப்பையும் பற்றிய தகவலை நாங்கள் பதிவுசெய்ய வேண்டும்.

## என்ன தகவலை நாங்கள் பதிவுசெய்கின்றோம்?

**நாங்கள் பதிவுசெய்யும் தகவலில் அடங்குபவை:**

- உங்கள் என்எச்எஸ் எண்
- உங்களுக்கான மற்றும் உங்கள் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கான தொடர்பு விபரங்கள்
- உங்கள் பால் மற்றும் இனப் பிரிவு
- உங்களுக்கு ஒரு தொழில் இருந்தால், அது பற்றிய மற்றும் நீங்கள் வசிக்கும் இடம் பற்றிய தகவல்
- உங்களைப் பற்றிய மதிப்பீடுகள் மற்றும் விடய மறுபரிசீலனைகள் பற்றிய விபரங்கள்
- நீங்கள் பெற்றுள்ள மற்றும் வருங்காலத்துக்காகத் திட்டமிடப்பட்டுள்ள சிகிச்சை உட்பட, உங்கள் பராமரிப்புத் திட்டம்
- எங்களுக்கும் உங்கள் குடும்ப வைத்தியர், (உங்களுக்கு ஒருவர் இருந்தால்) உங்கள் சமூக வேலையாளர், மற்றும் உங்கள் பராமரிப்புடன் சம்பந்தப்பட்ட ஏனைய முகவர் அமைப்புக்கள் போன்ற ஏனைய மக்களுக்கும் இடையிலான கடிதத் தொடர்பு

மிகப் பொருத்தமான பராமரிப்பையும் சிகிச்சையையும் உங்களுக்கு அளிப்பதற்கு எங்களுக்கு உதவ (உங்கள் முகவரியிலுள்ள ஏதாவது மாற்றங்கள் உட்பட) உங்களைப் பற்றிய சரியான மற்றும் தற்போதுள்ளதான தகவலைத் தயவுசெய்து எங்களுக்குத் தரவும்.

உங்கள் தகவலை நாங்கள் எமது பகுதிக்கான மின்ரீதியான ஆரோக்கிய பதிவேடுகள் முறையில் வைத்திருக்கின்றோம். இதனைப் பெற்றுக்கொள்ளுதல் முற்றிலும் கட்டுப்படுத்தப்படுவதுடன் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு தேவையின் அடிப்படையில் மாத்திரம் அனுமதிக்கப்படுகின்றது. உங்கள் அனுமதியின்றி, டிறஸ்டுக்கு வெளியிலான தனிப்பட்டவர்களால் அல்லது ஏனைய முகவர் அமைப்புக்களால் இது பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எங்கள் பகுதிக்கான மின்ரீதியான முறையில் உங்கள் தனிப்பட்ட தகவல் வைத்திருக்கப்படுவதை நீங்கள் விரும்பாவிட்டால், நாங்கள் உங்களைப் பராமரிக்க முடிவது சாத்தியமற்றதாக இருப்பதுடன் வேறொரு டிறஸ்டிடமிருந்து பராமரிப்பைத் தேடிக்கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படலாம். இது டிறஸ்டுக்காக வேலை செய்யும் தனிப்பட்டவர்களுக்கும் மற்றும் சேவையைப் பயன்படுத்துவோருக்கும் பொருந்தும். இதற்குக் காரணம் எங்கள் பகுதிக்கான மின்ரீதியான முறையில் ஒரு பதிவேட்டை நீங்கள் வைத்திருக்காவிட்டால் ஆபத்து உள்ளது.

எங்கள் பழைய பதிவேடுகள் உட்பட, சில பதிவேடுகள் காகித கோர்வைகளில் வைத்திருக்கப்படுகின்றன. உங்கள் ஆரோக்கியம் பற்றிய தகவலை நாங்கள் தேசிய மின்ரீதியான நோயாளர் பதிவேட்டில் சேர்த்துக்கொள்வதில்லை என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

## அந்தரங்கம்

நீங்கள் எங்களுக்குத் தரும் தகவல் உணர்வைப் பாதிக்கும் தன்மையுள்தாக இருக்கலாம் என்பதை நாங்கள் அறிந்து உங்கள் அந்தரங்கத்தை மதிக்கிறோம்.

உங்களைப் பற்றிய தகவலை அந்தரங்கமாக வைத்திருப்பதற்கான ஒரு சட்டரீதியான கடமை எங்களுக்கு உண்டு. இதன் கருத்து நாங்கள் அதனைப் பாதுகாப்பாகச் சேமித்து அதனை அடைவதைக் கட்டுப்படுத்துகின்றோம்.

திறமையான மற்றும் பலனுள்ள சேவைகளை வழங்க எங்களுக்கு உதவுவதற்காகத் தகவலை நாங்கள் பயன்படுத்தும்போது, தனிப்பட்டரீதியாக உங்களை அடையாளப்படுத்தும் தகவலை நாங்கள் பகிர்ந்துகொள்வதில்லை.

## உங்கள் தகவலை நாங்கள் எதற்காகப் பயன்படுத்துகின்றோம்?

**உங்கள் தனிப்பட்ட தகவலை நாங்கள் பின்வருவனவற்றுக்காகப் பயன்படுத்துகின்றோம்:**

- இப்போதும் வருங்காலத்திலும் பலனுள்ள மற்றும் பொருத்தமான பராமரிப்பை உங்களுக்கு வழங்குவதற்கு
- எங்கள் தீர்மானங்களை விளக்குவதற்கு
- நீங்கள் ஒரு புகாரைச் செய்தால், விசாரிக்க எங்களுக்கு உதவுவதற்கு
- உங்களுக்கான எங்கள் பராமரிப்பை அவதானித்துச் சரிபார்த்துக்கொள்வதற்கு

**உங்களை அடையாளப்படுத்தாத தகவலை நாங்கள் பின்வருவனவற்றுக்காகப் பயன்படுத்துகின்றோம்:**

- வருங்காலத்துக்கான சேவைகளைத் திட்டமிடுவதற்கு
- நாங்கள் உயர்ந்த தரமான, திறமையான மற்றும் பலனுள்ள சேவைகளை வழங்குகின்றோம் எனப் பார்த்துக்கொள்வதற்காக நாங்கள் எங்கள் வேலையை அவதானிப்பதற்கு
- உங்ஞூர் மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க உதவுவதற்கு
- ஒவ்வொருவரையும் நேர்மையாக நடத்துவதற்கு

## உங்கள் தனிப்பட்ட தகவலைப் பகிர்ந்துகொள்ளுதல்

**டிறஸ்டில் உங்கள் தனிப்பட்ட தகவலை நாங்கள் பகிர்ந்துகொள்வது:**

உங்களைப் பராமரிப்பதற்கு எங்கள் பல்துறை சார்ந்த குழுக்களில் உள்ள தனிப்பட்டவர்கள் பார்த்து, பொருத்தமான தகவலைச் சேர்த்துக்கொள்கிறார்கள் என உறுதிப்படுத்துவதற்காக. பல்துறை சார்ந்த குழுக்களில் அடங்குவோர் சமூக வேலையாளர்கள் மற்றும் உங்கள் பராமரிப்புக்குப் பங்களிக்கும் ஏனைய உத்தியோகத்தர்கள். டிறஸ்டின் அந்தரங்கம் தொடர்பான கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் என்பவற்றுக்கு அவர்கள் கீழ்ப்படிகிறார்கள் எனப் பார்த்துக்கொள்வதற்கு ஒப்பந்தங்கள் நடைமுறையில் உள்ளன.

உங்களுக்குத் தேவைப்படும் பராமரிப்பையும் சேவைகளையும் வழங்க உதவுவதற்கு, ஏனைய முகவர் அமைப்புக்களுடன் உங்கள் தனிப்பட்ட தகவலை நாங்கள் பகிர்ந்துகொள்கின்றோம்.

**உங்கள் தனிப்பட்ட தகவலை நாங்கள் பகிர்ந்துகொள்ளும் முகவர் அமைப்புக்களில் அடங்குபவை:**

- உங்கள் குடும்ப வைத்தியர்
- ஏனைய ஆரோக்கிய அமைப்புக்கள் - உதாரணமாக, வைத்தியசாலை
- வீட்டுத் துறை அல்லது வீட்டு வசதி முகவர் அமைப்புக்கள்
- பெனிவிட்டுக்கள் தொடர்பான முகவர் அமைப்பு.

**உங்கள் பராமரிப்பாளருடன் அல்லது குடும்பத்துடன் தகவலைப் பகிர்ந்துகொள்ளுதல்**

**உங்கள் பராமரிப்பாளருடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் உங்கள் தனிப்பட்ட தகவலை நாங்கள் பகிர்ந்துகொள்கிறோம் நீங்கள்:**

- உங்கள் சம்மதத்தைக் கொடுத்துள்ளபோது
- உங்கள் சொந்தத் தீர்மானங்களைச் செய்துகொள்வதற்கான ஆற்றல் உங்களுக்கு இல்லாதபோது
- உங்கள் பராமரிப்புப் பற்றிய தீர்மானங்களைச் செய்துகொள்ள முடியாதிருக்கும் ஒரு இளம் நபராக நீங்கள் இருக்கும்போது
- குடும்பப் பராமரிப்பில் நீங்கள் சம்பந்தப்பட்டிருந்து குடும்பச் சுகமளிப்புச் சிகிச்சை நிகழ்வுகள் பற்றிய தகவலைப் பகிர்ந்துகொள்வதற்கு நீங்கள் உடன்பட்டுள்ளபோது

ஒரு உண்மையான தேவை இருக்கும்போது மாத்திரமே பகிர்ந்துகொள்ளுதல் அனுமதிக்கப்படுகின்றது. உங்களின் எந்தத் தனிப்பட்ட தகவல் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டியதாக உள்ளது எனவும் எவ்வாறு இது செய்யப்படும் எனவும் உங்கள் பராமரிப்புடன் சம்பந்தப்பட்ட ஆரோக்கிய உத்தியோகத்தர்கள் விளக்குவார்கள்.

உங்களுக்கு அல்லது ஏனையோருக்குச் சிறப்பான சிகிச்சையை, பராமரிப்பை மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்குத் தேவையான தகவலை மிகச் சிறிய அளவில் மாத்திரமே நாங்கள் பகிர்ந்துகொள்கின்றோம். இது முற்றிலும் 'அறிந்துகொள்ள வேண்டும்' என்ற ஒரு அடிப்படையிலாகும். உங்களைப் பற்றிய தகவலைப் பெற்றுக்கொள்ளும் எவருக்கும் அதனை அந்தரங்கமாக வைத்திருப்பதற்கு இது போன்ற ஒரு சட்டரீதியான கடமை உண்டு.

உங்களைப் பராமரிப்பதற்கு எங்களுக்கு உதவ ஏனைய முகவர் அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்டோர் என்பவர்களும் உங்களைப் பற்றிய தகவலைப் பகிர்ந்துகொள்வார்கள்.

உங்களுக்குத் தேவைப்படும் பராமரிப்புப் பற்றிய நல்லதொரு புரிந்துணர்வை எங்களுக்குத் தருவதற்கு இதனைச் செய்யுமாறு நாங்கள் உங்கள் பராமரிப்பாளரையும் உங்கள் ஏனைய குடும்ப உறுப்பினர்களையும் ஊக்குவிக்கின்றோம்.

**உங்கள் அனுமதியின்றி உங்களைப் பற்றிய தகவலைப் பகிர்ந்துகொள்ளுதல் சட்டத்தால் முற்றிலும் கட்டுப்படுத்தப்படுகின்றது.**

## உங்களை அடையாளப்படுத்தாத தகவலைப் பகிர்ந்துகொள்ளுதல்

சில சமயங்களில் உங்களை அடையாளப்படுத்தாத தகவலை ஏனைய முகவர் அமைப்புக்களுடன் நாங்கள் பகிர்ந்துகொள்கின்றோம்– உங்கள் பராமரிப்புக்காகப் பணம் வழங்கும் எங்கள் ஆணையாளர்கள் போன்றோர். இதனை நாங்கள் செய்யும்போது உங்களை அடையாளப்படுத்தும் தகவலை நீக்கிவிடுகின்றோம். இதனை நாங்கள் 'பெயரிடப்படாத' அல்லது 'போலிப் பெயரிடப்பட்ட' தகவல் என அழைக்கின்றோம்.

## உங்கள் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளுதல்

உங்கள் தனிப்பட்ட தகவலைப் பகிர்ந்துகொள்வதற்குச் சம்மதிக்குமாறு உங்கள் பராமரிப்புடன் சம்பந்தப்பட்ட வேலையாளர் உங்களைக் கேட்பார். நீங்கள் மறுக்கலாம் அல்லது என்ன தகவல் பகிர்ந்துகொள்ளப்படலாம் அல்லது அதனை யாருடன் நாங்கள் பகிர்ந்துகொள்ளலாம் என நீங்கள் கட்டுப்படுத்தலாம். உங்கள் தகவலைப் பகிர்ந்துகொள்வதற்கு நீங்கள் மறுத்தால், சில சந்தர்ப்பங்களில் உங்களை எங்களால் பராமரிக்க முடியாமலிருக்கலாம்.

உங்கள் சம்மதத்தைத் தெரிவிக்கும் 'பயன்படுத்துவதற்கும் பகிர்ந்துகொள்வதற்குமான அனுமதி' எனப்பட்ட ஒரு படிவத்தை நிரப்புமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். முழுமையான சம்மதம் என்பதன் கருத்து உங்களுக்கான சிறந்த பராமரிப்பை வழங்குவதற்காக உங்கள் உறவினர்கள், பராமரிப்பாளர்கள், மற்றும் ஏனைய சேவைகள், முகவர் அமைப்புக்கள் என்போருடன் உங்கள் தனிப்பட்ட தகவல் பகிர்ந்துகொள்ளப்படலாம் என்பதாகும். 'பயன்படுத்துவதற்கும் பகிர்ந்துகொள்வதற்குமான அனுமதி' படிவத்துக்கு நீங்கள் கையெழுத்திடுவதற்கு முன்னர் எதற்கு நீங்கள் உடன்படுகிறீர்கள் என்பதை நீங்கள் முழுமையாகப் புரிந்துகொள்கிறீர்கள் என நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். சில அவசர சமயங்களில் அல்லது அதனைச் சட்டம் வேண்டிக்கொள்ளும்போது கட்டுப்பாடுகளை நாங்கள் மீறக்கூடும்.

## உங்களைத் தொடர்புகொள்ளுதல்

நீங்கள் உங்கள் கைத் தொலைபேசி இலக்கத்தை எங்களுக்குத் தந்தால், அவ்வாறு செய்ய வேண்டாம் என நீங்கள் எங்களுக்குச் சொன்னாலே தவிர, நியமனங்கள் பற்றியும் உணர்வைப் பாதிக்காத ஏனைய தகவல் பற்றியும் ரெக்ஸ்ட் செய்தி மூலமான நினைவூட்டல்களை நாங்கள் உங்களுக்கு அனுப்புவோம்.

உங்கள் ஆரோக்கியம் தொடர்பாக மின் அஞ்சல் மூலமாக நாங்கள் உங்களுடன் தொடர்புகொள்வதை நீங்கள் விரும்பினால், நீங்கள் எங்களது 'தகவலைப் பயன்படுத்துவதற்கும் பகிர்ந்துகொள்வதற்குமான அனுமதி' படிவத்தில் உடன்பட வேண்டும். எந்த மின் அஞ்சல் முகவரிக்கு நாங்கள் தகவல் அனுப்பவேண்டும் என நீங்கள் விரும்பும் அந்த முகவரியிலிருந்து ஒரு மின் அஞ்சலையும் நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டும். நீங்கள் எங்களுக்கு ஒரு மின் அஞ்சலை அனுப்பாவிட்டால், நாங்கள் உங்களுக்கு மின் அஞ்சல்களை அனுப்ப முடியாதிருக்கலாம்.

## உங்கள் பதிவேடுகளைப் பெற்றுக்கொள்ளுதல்

அது காகித மூலமாக அல்லது மின் ரீதியாக வைத்திருக்கப்பட்டாலும், உங்கள் ஆரோக்கிய பதிவேடுகளின் ஒரு பிரதியைப் பார்ப்பதற்கான அல்லது அதனைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு உரிமை உங்களுக்குண்டு.

ஒரு உறவினர் அல்லது ஒரு சட்ட அறிவுரையாளர் அல்லது வேறொருவர் உங்கள் பேரில் பெற்றுக்கொள்வதை வேண்டினால், நீங்கள் எழுத்து மூலமாக உங்கள் சம்மதத்தைக் கொடுக்க வேண்டும். அவர்கள் தமது முறைப்படியான எழுத்து மூலமான வேண்டுதலைச் செய்யும்போது இது எங்களுக்கு அனுப்பப்பட வேண்டும். இல்லாவிட்டால், உங்கள் சம்மதத்தை வழங்குமாறு நாங்கள் அவர்களைக் கேட்கும்போது ஒரு தாமதம் இருக்கும். உங்கள் பதிவேடுகளை அவர்களுக்குக் கொடுப்பது தொடர்பாகப் பணம் கேட்டுக்கொள்ளப்படலாம்.

21 நாட்களுக்குள் பதிலளிப்பது எங்கள் நோக்கமாக இருந்தாலும், உங்கள் பதிவேடுகளைப் பெற்றுக்கொள்ளுதல் 40 நாட்கள் வரைப்பட்ட காலத்தை எடுக்கலாம்.

உங்கள் பதிவேடுகளின் பிரதி ஒன்றைப் பார்ப்பதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் விரும்பினால், நீங்கள் உங்கள் பராமரிப்பைப் பெற்றுக்கொண்ட இடத்திலுள்ள மேலாளரைத் தொடர்புகொள்ளவும். இது யார் என உங்களுக்குச் சரியாகத் தெரியாவிட்டால், பின்வரும் இடத்திலுள்ள தகவல் நிர்வகிப்புக் குழுவைத் தொடர்புகொள்ளவும்:

மின் அஞ்சல்: foirequest@eastlondon.nhs.uk
தபால்: **Information Governance Manager**
Trust HQ, EastONE
22 Commercial St, London E1 6LP
டிறஸ்டின் பின்வரும் இணையதளத்தில் மேலதிக தகவல் கிடைக்கின்றது:
http://www.eastlondon.nhs.uk

## உங்கள் தனிப்பட்ட தகவல் பயன்படுத்தப்பட்ட, பகிர்ந்துகொள்ளப்பட்ட அல்லது உங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட விதம் குறித்து உங்களுக்கு மகிழ்ச்சியில்லாவிட்டால், என்ன செய்வது

தகவலுக்கான உங்கள் வேண்டுகோள் பற்றிய எங்கள் பதிலுடன் அல்லது உங்கள் தகவலை நாங்கள் பயன்படுத்திய அல்லது பகிர்ந்துகொண்ட விதம் குறித்து நீங்கள் மகிழ்ச்சியடையாவிட்டால், உங்கள் பராமரிப்பை நீங்கள் பெற்றுக்கொண்ட இடத்திலுள்ள மேலாளரை நீங்கள் தொடர்புகொள்ள வேண்டும்.

நீங்கள் தொடர்ந்து திருப்தியற்றவராக இருந்தால், பின்வருவன மூலமாக நீங்கள் ஒரு முறைப்படியான புகாரைச் செய்யலாம் அல்லது கருத்தைத் தெரிவிக்கலாம்:
தொலைபேசி: **0800 7834839** என்பதில் அழைப்பு இலவசமானது.
தபால்: **Consumer Relations**
FREEPOST RLSH-BBHX-ZRRU
Trust HQ
EastONE
22 Commercial St
London E1 6LP

உங்கள் புகாருக்கு எங்களால் தீர்வுகாண முடியாவிட்டால், பின்வருவன மூலமாக, தகவல் ஆணையாளரின் அலுவலகத்தைத் தொடர்புகொள்வதற்கான உரிமை உங்களுக்குண்டு:
இணையதளம்: http://www.ico.gov.uk/
தபால்: **Information Commissioner's Office**
Wycliffe House
Water Lane, Wilmslow, Cheshire. SK9 5AF
தொலைபேசி: **01625 545700**